வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : CC 196 of 2015
வழக்கு சாட்சி – PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகேசன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

(எதிரிகள் ஆஜர்).

**முதல் விசாரணை** :

1) நான் தற்போது சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று தாராபுரத்தில் குடியிருந்து வருகிறேன்மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். கடந்த 16.03.2014 ஆம் தேதி 13.00 மணிக்கு பல்லடம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது சந்தோஷ் குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014 பரிவுகள் 457,388 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் . நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.ச.ஆ.5** ஆகும். பிறகு அசல் முதல் தகவல்அறிக்கையுடம் புகாரினை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அன்றே 14.00 மணிக்கு வாதி சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் ராமன் மற்றும் சிவராமன் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். அந்த மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ.6 ஆகும்.**

2)சாட்சிகள் சந்தோஷ்குமார், ஹரிசங்கர், ராமசந்திரன், ராமன், சிவராமன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புலன் விசாரணைக்காக

காவல் ஆய்வாளர் திரு. சுப்பிரமணயிம் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1) அ.சா.1 ன் விசாரணையில் 19 வகையான பேட்டரிகளின் பெயரை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் பதிவு செய்த பார்வை மகஜரில் சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார் என்றாலும் அவர் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான் ஆனால் அ.சா.1 சந்தோஷ்குமார் அடையாளம் காட்டினார். நான் வரைப்படத்தில் காட்டியுள்ள அருகே உள்ள கடைகளில் இருந்த நபர்களை சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் பதிவு செய்துள்ளேன். அ.சா.1 புகாரில் சொன்ன நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.01.27 16:52:01 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 196 of 2015

வழக்கு சாட்சி – PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயதேவி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 02.09.2025.

(எதிரிகள் ஆஜர்).

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது பல்லடம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து குடியிருந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான டி. சுப்பிரமணியன் இறந்துவிட்டதால் அவருக்காக வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.04.2020 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014 சட்டப்பிரிவு 457,380 இதச வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகேசன் முதல் கட்ட புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பை ஆய்வார் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

2)வழக்கினை ஆய்வாளர் 08.08.2014 ஆம் தேதி புலன் விசாரணைக் கு எடுத்துக்கொண்டு காலை 10.30 மணிக்கு அறிவொளி நகர் தொட்டியபிச்சி கோவில் பஸ் ஸ்டாப் அருகில் குற்ற வழக்கு சம்மந்தமாக எதிரிகளை தேடி

கண்காணித்துக்கொண்டிருந்தபோது 1 ஆம் எதிரி கார்த்திக் என்பவர் தனது இடது பக்க தோள்பட்டையில் ஒரு பேட்டரியை வைத்து தூக்கிக்கொண்டும் அவருடன் 2 ஆம் எதிரிகளில் நாகேந்திரன் என்பவர் பேசிக்கொண்டும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தவர்கள் போலீசாரை கண்டவுடன் பேட்டரியை கீழே போட்டுவிட்டுஓடு எத்தனித்தவர்களை போலீஸ் பார்டி சென்று விசாரிக்க அவர்கள் இருவரும் பல குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்டவர்கள் என தெரியவந்து . எதிரிகளை நாகேந்திரன் என்பவர் தன்னுடைய இடுப்பில் மூன்று செல்போன்களையும் ஒரு பிளாஸ்டிக் கவரில் போட்டு மறைத்து வைத்திருப்பது தெரியவந்தது. எதிரிகள் இருவரிடம் பேட்டரி மற்றும் செல்போன்கள் சம்மந்தமாக ஆய்வாளர் விசாரிக்க இருவரும் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014 சட்டப்பிரிவு 457,380 இதச வழக்கில் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 825/2014 சட்டப்பிரவு 457,380 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் என தெரியவந்ததால் இருவரையும் காலை 11.00 மணிக்கு பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236 /2014 , சட்டப்பிரிவுக்ள 457,380 இதச வழக்கில் எதிரிகள் இருவரையும் அதே இடத்தில் வைத்து கைது செய்து. சாட்சிகள் குமார், மற்றும் குமாரசாமி ஆகியோர்முன்னிலையில் எதிரி கார்த்திக் என்பவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அவர்களிடம் இருந்து SF sony பேட்டரி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.7 மற்றும் 8** ஆகும். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.9** ஆகும்.

3) சாட்சிகள் குமார் மற்றும் குமாரசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படத்தியுள்ளார். வழக்கு சொத்தினை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு பி.ஆர் எண். 108/2015 பெறப்பட்டுள்ளது. அந்த படிவம் 91 **ஆ.த.சா.அ.10** ஆகும்.SF sony

போட்டரி **அ.சா.பொ.1** ஆகும்.இத்துடன் புலன் விசாரணை முடிக்கப்பட்டு 27.11.2014 ஆம் தேதி சட்டப்பிரவுகள் 457,380 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

__எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :__

1) கைப்பற்றுதல் மகஜரில் சொல்லியுள்ள அந்த SF sony என்ற பேட்டரியை அ.சா.1 தன்னுடைய புகாரிலோ போலீசார் விசாரணையிலோ அதன் அடிப்படையில் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையில் சொல்லபப்படவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் 27.11.2014 ஆம் தேதி கார்த்திக் மற்றும் நாகேந்திரன் போனதாக முதல் பக்கத்தில் சொல்லப்படுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் ஒப்புதல் வாக்குமூலம் இரண்டு எதிரிகளில் கார்த்திகிடம் மட்டும் தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரி SF sony பேட்டரியை தோள்பட்டையில் சுமந்ததுகொண்டு சென்றார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2)இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்படவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் பொருட்களும்

எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.01.27 16:52:17 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.